பொழிய வேண்டும் மழை

- மமதா சாகர்
கன்னடத்திலிருந்து தமிழில்: ஜி.ஏ.கௌதம்

பொழிய வேண்டும் மழை பாலஸ்தீனத்தில்,
காசா பள்ளத்தாக்கின் குழந்தைகளின் ஆன்மாக்கள்
மழையின் இழையிழைகளை பிடித்தேறி
வான முற்றத்தில் இறங்கி, மேகத்தின் மேல் நடந்து,
காற்றுடன் தூளியாடியவாறே
வலிமிகுந்த நிலத்தின் நினைவுகளை நட்சத்திரங்களாக்கி
கரு வானம் முழுதும் தூவிட வேண்டும்.

பேசாமல் நிம்மதியாய்ச் சுருண்டு கிடக்கும்
நம் கனவில் அவர்கள் வர வேண்டும்;
உறங்க விடாத் துயரக்கதைகளின் ரீல்களை
மேலும் மேலும் விழித்திரையில் காட்ட வேண்டும்.

அவர்களைக் குறிவைத்த தோட்டா வெடித்து
கனவிலாவது நம்மைச் சிதறடிக்க வேண்டும்.
தலையுடைந்து, கைகால் சிதைந்து, பசியை
தட்டு நிறைய நிரப்பிக்கொண்டு,
வாராத சோறுக்கும் நீருக்கும் அவர்கள் காத்துக்கிடப்பது
இப்படியாவது நமக்கு உறைக்க வேண்டும்.

குழந்தைகள் வலியிலும் சிரிக்கிறார்கள்,
விளையாடுகிறார்கள், பாடுகிறார்கள்,
மரணத்தின் மடியேறியும் வாழ விரும்பும் துடிப்பைக் காட்டுகிறார்கள்,
கருணை இழந்து, மரத்து, உறங்கும் நம்மிடம் வேண்டுகிறார்கள்,
கனவு காணும் இன்னொரு வாய்ப்புக்காக.

மமதா சாகர்

கன்னடத்தில் மூத்த கவிஞர்
கருத்துரிமைக்காக வலுவான
குரல் எழுப்புபவர். கொல்லப்பட்ட
பத்திரிகையாளர் கௌரி லங்கேஷின்
நெருங்கிய சகாவும் அண்டை
வீட்டாரும் ஆவார்.
சங்பரிவாரங்களால் தொடர்ந்து
துரத்தப்பட்டு வருபவர்.

ஓயாமல் பெய்யும் இந்த இரத்த மழையில்
இனப்படுகொலை எனும் குடையின் கீழ் தேசத்தின் கனவை விற்று,
‘ஹா-ஹா ஹீ-ஹீ’ எனக்கூறி, தான் செய்த கொலையின் ரத்தக் கறையை
காசாவின் குழந்தைகளின் ரத்தத்தில் கழுவிக்கொள்ளப் புறப்பட்டவரின்
உறக்கம் முழுவதும் பெருமழை பெய்து,
பெருவெள்ளத்தில் நிம்மதி அடித்துச்சென்று
இனியென்றும் கனவே காண முடியாத நிலை வந்து சேரட்டும்!

அப்போதேனும், கனவுகளில் கால்பதித்த குழந்தைகள்
நம் கண்ணுக்குத் தெரிவார்கள், அணைத்துக்கொள்வோம் அவர்களை
இனியாவது உண்ணும் சோறு தொண்டையில் இறங்கும்
‘எங்கள் குழாய்களில் நீர் வந்தால் போதும்’ என்கிற
மதக்குருட்டுத்தனம் அழியும்.

●

SEMMALAR MONTHLY MAGAZINE VOLUME 56 ISSUE 11 APRIL 2026

www.semmalartamil.in

செம்மலர்

ஏப்ரல் 2026 விலை ரூ. 25/-

சாகித்ய அகாடமி விருது

கலந்துரையாடல்

திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ்

ஆவணப்படம் முன்னெடுக்கும் அரசியல்